13.08.2024 OS.No.83/2021

சாட்சி : PW 1 காளீஸ்வரி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை :**

பிரதிவாதி என்னுடை உடன்பிறந்த தம்பி. தாவா ஏ. அட்டவணை சொத்து காரைக்குடியில் உள்ளது. பி. அட்டவணை சொத்த சிவகங்கை பெருமாள்பட்டியில் உள்ளது. அது வீடும், காலியிடமும் ஆகும். தாவா சி.அட்டவணை சொத்து தென்காசியில் உள்ளது. தாவா அ. அட்டவணை சொத்தில் உள்ள வீட்டில் யாரும் குடியிருக்கிறார்களா என்று எனக்குத் தெரியாது. தாவா சொத்துக்கு பிரதிவாதி பெயரில் வரி ஏற்பட்டு அவர்தான் செலுத்தி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. என்னுடை கணவர் பெயர் கோவிந்தராஜ். அவர் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. என்னுடைய தகப்பனார் தற்போது உயிருடன் இல்லை. என் கணவர் கொலை மிரட்டல் செய்து, அது தொடர்பாக என் தகப்பனார் காரைக்குடி டி.எஸ்.பி-யிடம் புகார் கொடுத்துள்ளாரா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. என் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் அவருக்கும், என் கணவருக்கும் பிரச்சினையாக இருந்தது என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனாரும், தாயாரும் பிரதிவாதிக்கு உயில் எழுதி வைத்ததால் இந்த வழக்கு போட்டுள்ளோம் என்றால் அவர்கள் உயிலே எழுதி வைக்கவில்லை. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை படித்து பார்த்தேன். அதில் 23.03.2017ல் அ. அட்டவணை சொத்து உயில் மூலம் பிரதிவாதியின் தாயாரும், தகப்பனாரும் பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அது உண்மையில்லை. அவ்வாறு உயில் எழுதிக் கொடுத்துள்ளார்களா என்று சரிபார்ப்பதற்கு முயற்சி எதுவும் எடுக்கவில்லை என்றால், நாங்கள் கேட்டுள்ளோம். அந்த உயில் விசயம் தெரிந்ததால் தான் அதனைப்பற்றி விசாரிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் கொரோனா காலக்கட்டத்தில் இறந்துவிட்டார். என் தாயாரும், தகப்பனாரும் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்திருந்தால் எனக்கு ஆட்சேயபனை உள்ளதா என்றால், அவ்வாறு எழுதிக் கொடுத்திருக்கமாட்டார்கள். என் தகப்பனார் 07.11.2020ல் இறந்துவிட்டார். என் தாயார் 01.04.2017ல் இறந்துவிட்டார். என் தாயார், தகப்பனாரின் கையெழுத்து தெரியும். என்னிடம் காட்டப்படும் என் தாயார், தகப்பனாரின் கையெழுத்தா என்றால், ஆவணத்தை படித்து பார்த்தால் தான் சொல்லமுடியும்.

அ. அட்டவணை சொத்து என் தாயாருக்கும், தப்பனாருக்கும் தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றும், அதனை அவர்கள் 23.03.2017ல் பிரதிவாதிக்கு உயில் மூலம் பாத்தியப்படுத்திவிட்டார்கள் என்றும், அதன் பிறகு பிரதிவாதி சுவாதீனத்தை அடைந்து வரி செலுத்தி அனுபவித்து வருகிறார் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா ஆ.அட்டவணை சொத்து பெருமாள்பட்டியில் உள்ளது. அது என் தகப்பனார் பெயரில் பட்டா உள்ளது. எனக்கு இரண்டு பையன்கள். எனக்கு 1996ல் திருமணம் ஆனது. நான் காரைக்குடி, பர்மாகாலணியில் இருக்கிறேன். பெருமாள்பட்டிக்கும் எங்கள் வீட்டுக்கும் 60 கி.மீ தூரம் இருக்கும். மேற்படி ஆ. அட்டவணை சொத்தையும் என் தகப்பனார் பிரதிவாதிக்கு ஒரே ஆண் வாரிசு என்ற முறையில் பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விசயம் எனக்கு நன்றாக தெரியும் என்றும், என் கணவருக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் இறக்கும் தருவாயில் திடகாத்திரமாக இருந்தார் என்று சொன்னால், அவர் மனநிலை சரியில்லாமல் இருந்தார். அவர் சுயநினைவோடு இல்லை. அவ்வாறு அவர் சுயநினைவின்றி இருந்தார் என்று காட்டுவதற்கு ஆவணம் எதுவும் வைத்திருக்கவில்லை. என் தகப்பனார் சுயநினைவு இல்லாமல் இருந்தார் என்று வழக்கிற்காக சொல்லுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. இ. அட்டவணை சொத்தை பிரதிவாதி 22.08.2005ல் கந்தசாமி என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்றால், என் தகப்பனார் தான் கிரையம் வாங்கினார். மேற்படி கிரையப் பத்திரத்தை நான் பார்க்கவில்லை. மேற்படி இ. அட்டவணை சொத்து பிரதிவாதி கிரையம் வாங்கி அதன் பிறகு என் தகப்பனாருக்கு இனாம் செட்டில்மென்ட் எழுதி வைத்தார் என்று சொன்னால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அதனை மீண்டும் என் தகப்பனார் பிரதிவாதிக்கு 15.10.2020ல் தென்காசி சார் பதிவாளர் அலுவலகத்தில் ஒரு செட்டில்மென்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துவிட்டார் என்றால், அப்போது என் தகப்பனார் சுயநினைவு இல்லாமல் இருந்தார். அ. அட்டவணை சொத்து பிரதிவாதிக்கு உயில் மூலமும், இ. அட்டவணை சொத்து இனாம் செட்டில்மென்ட் மூலமும் பிரதிவாதிக்கு பாத்தியம் ஆகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல. ஆகவே, தாவா சொத்துக்களில் எனக்கு எந்த ஒரு பாகப்பிரிவினையும் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. என் கணவரின் தூண்டுதலின் பெயரில் அக்கிரம லாபம் அடையும் நோக்கில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் இறந்து 30 நாட்களுக்கு உள்ளேயே நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திரு.மு.வீரணன் M.A., L.L.M.,

சார்பு நீதிபதி,

தேவகோட்டை.